வாய்ந்த இந்த அரிய வகை வெர்மிகுலைட் இந்தியாவில் 3 மாநிலங்களில், குறிப்பாக தமிழகத்தில் இருக்கின்ற திருப்பத்தூர் தொகுதியில் செவ்வாத்தூரில் கிடைக்கிறது. இப்பகுதி மக்கள் அதிகளவில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஒரு தொழிற்சாலையைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே திருப்பத்தூர் தொகுதியில் மட்டும்தான் அந்தக் கனிமம் கிடைக்கின்றது. ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டு 1,600 மெட்ரிக் டன் உற்பத்திச் செய்கின்ற அளவிற்கு இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், சந்தை நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

சுற்றுலாத் தலம்

***18556—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 மே 9]

ஆலங்குளம் தொகுதி, பொட்டல்புதூர் மொகைதீன் ஆண்டவர் தர்கா பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மொகைதீன் ஆண்டவர் தர்கா உள்ளது. இங்கே அதிகமான இஸ்லாமியர்களும், சுற்றுலாப் பயணிகளும் வருவதாகக் கருத்துரு பெற்ற காரணத்தினால்தான், 2012—2013 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், பொட்டல்புதூர் மொகைதீன் ஆண்டவர் தர்காவிற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை செய்து தர வேண்டி இம்மாமன்றத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனடிப்படையில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் திட்ட மதிப்பீடு பெறப்பட்டு விரைவிலேயே அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாலைப்பொழுது 4 மணி எப்பொழுது வரும் என்று பறவைகளெல்லாம் தங்கள் குரலை எழுப்பி வரவேற்கும். அதைப்போலத்தான் தமிழக மக்களெல்லாம் காலை 11 மணி எப்பொழுது வரும், இன்றைக்கு என்ன திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் விதி 110—ன்கீழ் அறிவிக்கப்போகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். பொட்டல்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 40,000 மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பொட்டல்புதூர் தர்காவைச் சுற்றுலாத் தலமாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு சிறுபான்மை மக்களின் சார்பாகவும், ஆலங்குளம்

தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

242—

பேருந்துப் பணிமனை

***5399—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 30 நகரப் பேருந்துகள்வரை இயக்கப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் பணிமனையிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு, வத்திராயிருப்பு புதிய பணிமனை அமைக்க 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட நிருவாகத்திடம் நிலம் பெறப்பட்ட பிறகு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

முற்பகல் 10—35

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி